# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**

INTEGRATED INVESTIGATION FORM-I

C 8044358

1. District மாவட்டம் : கோவை   PS: காவல்நிலையம்: ஊ.த.க.பிரிவு   Year: ஆண்டு: 2022   FIR No.: மு.த.அ. எண்: 04/2022/AC/CB   Date: நாள்: 11.2.2022

2. (i) Act சட்டம்: PC Act 1988 as amended by the PC Act (Amendment) 2018   Sections பிரிவுகள்: 7(a), 7(b)
   (ii) Act சட்டம்:   Sections பிரிவுகள்: 7(a), 7(b) r/w 12
   (iii) Act சட்டம்:   Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்   Date from : நாள் முதல் 10.2.2022   Date to : நாள் வரை 11.2.2022
   Time Period : நேர அளவு   Time from : நேரம் முதல் 1530 hrs   Time to : நேரம் வரை 0600 hrs
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 11.02.2022   Time நேரம் : 07.45 hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்   Time நேரம் :

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக : written

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் 15 Km தெற்கு
   Beat Number : முறைக் காவல் எண்   (b) Address : முகவரி வட்டார போக்குவரத்து அலுவலர் மேற்கு, கோவை
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்   District : மாவட்டம்

6. Complainant /informant (a) Name : குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் A. சேனாபதி   (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர்
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு   (d) Nationality நாட்டினம் இந்தியன்   (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள்   Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் ஆய்வுக்குழு ஆய்வாளர்,   (g) Address : முகவரி மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், கோவை.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   (1) திரு. குமரவேல், s/o. கந்தசாமி, வட்டார போக்குவரத்து அலுவலர், வட்டார போக்குவரத்து அலுவலகம் (மேற்கு), கோவை
   (2) திரு. V. லோகநாதன், s/o. வேலுச்சாமி, கண்காணிப்பாளர், வட்டார போக்குவரத்து அலுவலகம் மேற்கு
   (3) திரு. S. [illegible] s/o. செல்வராஜ், கதவு எண்: 6B, பொங்கியகவுண்டர் வீதி, கண்ணம்பாளையம், சூலூர், கோவை

8. Reasons for delay in reporting by the complainant / Informant.
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed Tmt. P. Parimaladevi Rank Inspector of Police to take up the investigation / Refused Investigation / transferred to PS V & A C, Coimbatore on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ..................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு [signature] 11/2/2022

[signature] 11/2/2022
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
11.2.2022 at 0830 hrs

Name: பெயர் C. LATHA
Rank: நிலை INSPECTOR OF POLICE
V & AC, COIMBATORE.

பணிந்து சமர்பிக்கப்படுகிறது:

**In continuation of FIR in Coimbatore V&AC Cr.No.04/2022/AC/CB u/s 7(a), 7(b) and 7(a), 7(b) r/w 12 of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018.**

இன்று 11.02.2022 காலை 07.45 மணிக்கு கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு ஆய்வாளர் C.லதா ஆகிய நான் அலுவலகத்தில் பணியில் இருந்த போது திரு.A.சேனாபதி, ஆய்வுக்குழு ஆய்வாளர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், கோவை என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமாக புகாரினை பெற்று கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.04/2022/AC/CB u/s 7(a), 7(b) and 7(a), 7(b) r/w 12 of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018, Dated: 11.02.2022 ன்படி எதிரிகள் 1) திரு.குமரவேல், த/பெ கந்தசாமி, வட்டாரப்போக்குவரத்து அலுவலர், வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் (மேற்கு), கோவை, திரு.V.லோகநாதன், த/பெ வேலுச்சாமி, காண்காணிப்பாளர், வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் (மேற்கு), கோவை மற்றும் திரு.S.குணசேகரன், த/பெ செல்வராஜ், கதவு எண்.6B, பொங்கிய கவுண்டர் தெரு, கண்ணம்பாளையம், சூலூர், கோவை, **(Private Person)** ஆகியோர்கள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது. புகாரின் விவரம் பின்வருமாறு:- அனுப்புநர் A.சேனாபதி, ஆய்வுக்குழு ஆய்வாளர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், கோவை பெறுநர் காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, கோவை. **ந.க.எண்.100/2022/ஐ1,** நாள். **11.02.2022.** அய்யா, பொருள்: திடீர் தணிக்கை – கோயம்புத்தூர் மாவட்டம் – வட்டாரப் போக்குவரத்து அலுவலகம், கோவை (மேற்கு) – திடீர் தணிக்கை மேற்கொள்ளப்பட்டது – மேல்நடவடிக்கைக்காக புகார் அளித்தல் – சம்மந்தமாக. கோயம்புத்தூர், கோவைப்புதூரில் உள்ள மேற்கு வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தில் உள்ள வட்டாரப் போக்குவரத்து அலுவலர் மற்றும் அலுவலக பணியாளர்கள் அன்றாடம் வட்டார போக்குவரத்து மேற்கு அலுவலகத்திற்கு வரும் பொதுமக்களிடமிருந்து நேரடியாகவும் மற்றும் ஓட்டுனர் பயிற்சிப்பள்ளி உரிமையாளர்கள், பணியாளர்கள், இடைதரகர்கள் மூலம் பொதுமக்களின் வாகன ஓட்டுனர் உரிமம், புதிய வாகனப் பதிவு, தகுதிச்சான்று, அடமான ரத்து மற்றும் பெயர் மாற்றம் போன்றவற்றுக்கு பொதுமக்களிடமிருந்து

மாமூலாக கையூட்டு பெறுவதாக கிடைத்த நம்பகமாக தகவலின் அடிப்படையில் கோவை மேற்கு வட்டாரப்போக்குவரத்து அலுவலகத்தை 10.02.2022 ஆம் தேதி மாலை சுமார் 16.00 மணி முதல் 11.02.2022 ஆம் தேதி 06.00 மணிவரை கோவை மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் திருமதி.C.லதா மற்றும் காவல் குழுவினர்களுடன் திடீர் தணிக்கை செய்யப்பட்டது. திடீர் தணிக்கையில் கீழ்கண்ட விபரங்கள் தெரிய வந்தது. கோவை மேற்கு வட்டாரப் போக்குவரத்து அலுவலகமானது கோவைபுதூரில் கிழமேல் செல்லும் 100 அடி சாலையின் தெற்குபுறத்தில் வடக்கு பார்த்த நுழைவாயிலுடன் அமைந்துள்ள வாடகை கட்டிடத்தில் இயங்கிவருகிறது. மேற்படி அலுவலகத்தின் கேட்டினுள் நுழைந்ததும் ஒரு நீண்ட வராண்டாவும், அந்த வராண்டாவிற்கு வலது புறமும், இடது புறமும் கிழக்கு மற்றும் மேற்கு பார்த்தவாறு அறைகள் இருந்தன. அவ்வலுவலகத்தில் நுழைந்ததும் வலதுபுறம் கிழக்கு பார்த்திருந்த முதல் அறையில் இரண்டு பெண்கள் கம்யூட்டர் முன்பு அமர்ந்து வேலை செய்து கொண்டிருந்தனர். அவர்களை அங்கேயே அமரும்படி அறிவுறுத்தப்பட்டது. அந்த அறைக்கு அடுத்து கிழக்கு பார்த்தவாறு இருந்த வட்டாரப்போக்குவரத்து அலுவலர் அறை இருந்தது. அதன் எதிர்புறம் தபால் பிரிவு மற்றும் அனுப்புகை பிரிவு அறையும் அதை ஒட்டி பழகுனர் உரிமம் தேர்வு அறையும் அதை ஒட்டி இயக்க ஊர்தி ஆய்வாளர்கள் அறையும் இருந்தது. மேற்படி அறைகளில் இருந்தவர்களை அந்தந்த அறைகளிலேயே அப்படியே இருக்கும்படி அறிவுறுத்தப்பட்டது. அதனை தொடர்ந்து வட்டாரப்போக்குவரத்து அலுவலர் என்று குறிப்பிடப்பட்டிருந்த அறையுனுள் நுழைந்த போது அந்த அறையானது கண்ணாடி தடுப்பினால் இரண்டாக பிரிக்கப்பட்டு காணப்பட்டது. அதன் முன் பகுதியில் இருந்த இரண்டு நபர்களை விசாரிக்க அவர்களில் ஒருவர் தனது பெயர் சுப்பிரமணியம் என்றும், தான் பூவே என்ற ஓட்டுனர் பயிற்சி பள்ளியின் உரிமையாளர் என்றும், இன்று வட்டாரப்போக்குவரத்து அலுவலரை பார்க்க இங்கு வந்ததாக கூறியவரை அந்த அறையிலேயே இருக்கும்படி அறுவுறுத்தப்பட்டது. அங்கிருந்த மற்றொரு நபரை விசாரிக்க அவர் தனது பெயர் ஆறுமுகராஜன் என்றும் தான் வட்டாரப்போக்குவரத்து அலுவலர் திரு.குமரவேல் என்பவரின் வாகன ஓட்டுனர் என்று கூறியவரை அந்த அறையிலேயே இருக்கும்படி அறிவுறுத்தப்பட்டது. பின்னர் அந்த அறையை தொடர்ந்து உள்அறையில் அமைந்திருந்த நபரை விசாரிக்க அவர் தனது பெயர் குமரவேல் என்றும் தான் கோவை மேற்கு வட்டாரப்போக்குவரத்து அலுவலகத்தின் RTO என்றும் கூறியவரிடம் ஆய்வுகுழுவினர் தங்களை அறிமுகப்படுத்திகொண்டபின் இந்த திடீர் சோதனை நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது. அதனை தொடர்ந்து கோவை மேற்கு RTO அவர்களிடம் உள்ள

பணம் பற்றி விசாரிக்க அவர் தனது பேண்ட் பாக்கெட்டிலிருந்து பணம் மற்றும் ஒரு கார் ரிமோட் சாவியையும் எடுத்து ஆஜர் செய்தார். அவர் ஆஜர் செய்த பணத்தை எண்ணி பார்க்க அதில் ரூ.900/– (200x1, 100x7) இருந்தது. அது குறித்து விசாரிக்க அப்பணம் தனது சொந்தப்பணம் என்றும் அதை இவ்வலுவலகத்தில் பராமரிக்கப்பட்டுவரும் அலுவலக பணியாளர் ரொக்கப்பதிவேட்டில் பதியபட்டுள்ளதாகவும் கூறியதன்பேரில் அப்பதிவேட்டை பார்வையிட்டு உறுதி செய்த பின் மேற்படி பணம் ரூ.900/– அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. மேலும் மேற்படி கார்–ரிமோட் சாவியை குறித்து விசாரிக்க அது தனது சொந்த காரின் சாவி என்றும் அந்த காரை இவ்வலுவலகத்தின் வெளியே நிறுத்தி வைத்துள்ளதாகவும் தெரிவித்தார். அவரது அறையினை சோதனை செய்த போது அதன் வடமேற்கு மூலையில் கிழக்கு பார்த்தவாறு வைத்திருந்த பிரோவின் அடியில் காக்கி நிற கவர் ஒன்று காணப்பட்டது. அதனை எடுத்து சோதனையிட அதில் பணம் ரூ.20,000/– (2000x8, 500x8) இருந்தது. மேற்படி பணத்தை பற்றி வட்டாரப்போக்குவரத்து அலுவலரிடம் விசாரிக்க அவர் அதற்கு தகுந்த முகாந்திரம் சொல்லாததால், மேற்படி பணம் ரூ.20,000/– விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் இவ்வலுவலகத்திற்கு வெளியில் இருந்த TN 41 AC 7171 என்ற பதிவு எண் கொண்ட RTO அவர்களுக்கு சொந்தமான வெள்ளை நிற மாருதி Swift Dzire காரினை திறந்து சோதனை செய்ய அதன் பின்சீட்டில் வைக்கப்பட்டிருந்த VS Creation என்ற பெயர் போட்ட பிரவுன் நிற ரெக்சின் கைப்பை ஒன்று இருந்தது. அதனை திறந்து சோதனையிட அதில் ஒரு காலி டிப்பன்பாக்கம், வெள்ளை நிற கவர் ஒன்றும், காக்கி நிற கவர் ஒன்றும் இருந்தன. அவற்றில் வெள்ளை நிற கவரை திறந்து பார்க்க அதில் ரூ.15,900/– (500x31, 200x2) இருந்தது, அதனுடன் ஒரு வெள்ளை நிற துண்டு சீட்டில் 09.02.2022 என்று தலைப்பில் எழுதப்பட்டு அதில் உள்ள விவரங்கள் எழுதப்பட்டு மொத்தம் ரூ.14,400/– என்று பேனாவால் எழுதப்பட்டிருந்தது. மேற்படி பணத்தை பற்றி வட்டாரப்போக்குவரத்து அலுவலரிடம் விசாரிக்க அவர் அதற்கு தகுந்த முகாந்திரம் சொல்லாததால், மேற்படி பணம் ரூ.15,900/– மற்றும் வெள்ளை நிற கவர் ஆகியவைகள் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் துண்டு சீட்டில் ஆய்வுகுழுவினர், நேர்முக உதவியாளர் மற்றும் வட்டாரப்போக்குவரத்து அலுவலரால் ஒப்பம் செய்யப்பட்டு விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. அந்த பேக்கில் இருந்த மற்றொரு காக்கி நிற கவரை பார்க்க அதில் பணம் ரூ.2000/– (500x4) இருந்தது, அதனுடன் சிறிய துண்டு சீட்டு இருந்தது. அதில் Rc Valid Heavy என்று பேனாவால் எழுதப்பட்டிருந்தது. மேற்படி பணத்தை பற்றி வட்டாரப்போக்குவரத்து அலுவலரிடம்

விசாரிக்க அவர் மேற்படி பணத்தை ஓட்டுனர் பயிற்சி பள்ளி வைத்திருக்கும் திரு.சுப்பிரமணியன் என்பவரிடமிருந்து சாகுல் அமீது என்பவருடைய விண்ணப்பத்தை அப்ரூவல் செய்ததற்காக அவரிடமிருந்து வாங்கிய தொகை என்று சொன்னதால் மேற்படி பணம் ரூ.2,000/– மற்றும் காக்சி நிற கவர் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் துண்டு சீட்டில் ஆய்வுகுழுவினர், நேர்முக உதவியாளர், வட்டாரப்போக்குவரத்து அலுவலர் மற்றும் திரு.சுப்பிரமணியன் ஆகியோரால் ஒப்பம் செய்யப்பட்டு விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. அதனை தொடர்ந்து தபால் பிரிவு மற்றும் அனுப்புகை பிரிவு அலுவலக அறையில் இருந்த நபரை விசாரிக்க அவர் தனது பெயர் திரு.ஜெய்சங்கர் என்றும் தான் இதற்கு முன்பு இவ்வலுவலகத்தில் Computer Programmer ஆக வேலைசெய்ததாகவும், தற்போது அலுவலகத்தல் உள்ள அலுவலக உதவியாளர் திருமதி.பத்மா என்பவரை சந்திக்க வந்ததாகவும் கூறினார். மேற்படி அறையை சோதனை செய்தலில் எதுவும் கைப்பற்றப்படவில்லை. அதனை தொடர்ந்து பழகுனர் உரிமம் தேர்வு என்ற அறையில் இருந்த பெண்ணிடம் விசாரிக்க அவர் தனது பெயர் பத்மா என்றும் தான் இங்கு அலுவலக உதவியாளராக பணிபுரிந்து வருவதாகவும் கூறினார். மேலும் அவரிடம் இருந்த பணத்தை பற்றி விசாரிக்க அவர் தன்னிடமிருந்த ரூ.450/– ஐ எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தை பற்றி விசாரிக்க அது தனது சொந்த பணம் என்றும் அதை அலுவலக பணியாளர் ரொக்கப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ளதாக கூறியதன் பேரில் அதன் விவரம் சரிபார்க்கப்பட்டு மேற்படி பணத்தை அவரிடம் திருப்பி கொடுக்கப்பட்டது. மேலும் அதே அறையில் இருந்த மற்றொரு நபரை விசாரிக்க அவர் தனது பெயர் திரு.மணிகண்ணன் என்றும், தான் வட்டாரப்போக்குவரத்து அலுவலர் (மேற்கு) அவர்களுக்கு உதவியாக புதிய வாகனங்களுக்கு பதிவு எண் வேண்டி இவ்வலுவலகத்தில் ஆன்லைன் மூலம் பெறப்படும் விண்ணப்பங்களை அதற்குரிய ஆவணங்களுடன் சரிபார்த்து அப்ரூவலுக்காக வட்டாரப்போக்குவரத்து அலுவலரிடம் சமர்ப்பிக்கும் வேலையை செய்து வருவதாகவும், இதற்காக சம்பளமாக மேற்படி புதிய வாகனங்களை பதிவு செய்யும் டீலர்கள் வாரம் ரூ.2000/– சம்பளமாக தருவார்கள் என்றும் கூறினார். மேற்படி அந்த அறையை சோதனை செய்து பார்த்த போது அறையில் எதுவும் கைப்பற்றப்படவில்லை. அதனை தொடர்ந்து அங்கிருந்த இயக்க ஊர்தி ஆய்வாளர்கள் என்று குறிப்பிடப்பட்டிருந்த அறையில் யாரும் இல்லாததால் மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.செந்தில்ராம் என்பவருக்கு போன் மூலம் தகவல் சொல்லி வரச்சொல்லப்பட்டது. அதனை தொடர்ந்து அங்கிருந்து வடக்கு பார்த்திருந்த A - பிரிவுக்குள் நுழைய ஒரு சிறிய அறை இருந்தது. அதில் ஒரு டேபிள் மட்டும் போடப்பட்டிருந்ததது. அந்த அறையை சோதனை செய்து பார்த்த

போது அந்த அறையில் இருந்து எதுவும் கைப்பற்றப்படவில்லை. அதனை தொடர்ந்து வலது புறம் PA to RTO என்ற அறையில் இருந்தவரை விசாரிக்க அவர் தனது பெயர் ஜெயலட்சுமி என்றும் தான் வட்டாரப்போக்குவரத்து அலுவலரின் நேர்முக உதவியாளர் என்றும் கூறினார். மேற்படி அறையை சோதனை செய்து பார்த்த போது அறையில் இருந்து எதுவும் கைப்பற்றப்படவில்லை. அவரிடம் இருந்த பணத்தை பற்றி கேட்க அவர் தன் பையில் இருந்த ரூ.1000/– ஐ எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தை பற்றி விசாரிக்க அது தனது சொந்த பணம் என்றும் அது குறித்து இவ்வலுவலகத்தில் பராமரிக்கப்பட்டுவரும் பணியாளர் ரொக்கப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ளதாக கூறியதன் பேரில் அதன் விவரம் சரிபார்க்கப்பட்டு மேற்படி பணத்தை அவரிடம் திருப்பி கொடுக்கப்பட்டது. அதனை தொடர்ந்து அந்த அறையை ஒட்டி இருந்த அறைக்குள் இருந்த நபர்களை விசாரிக்க அதில் ஒருவர் தனது பெயர் அபிநயா என்றும் தான் மேற்கு வட்டாரப்போக்குவரத்து அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வருவதாகவும் கூறினார். அவரிடம் இருந்த பணத்தை பற்றி விசாரிக்க அவர் தன் பையில் இருந்த ரூ.600/– ஐ எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தை பற்றி விசாரிக்க அது தனது சொந்த பணம் என்றும் அதை அலுவலக பணியாளர் ரொக்கப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ளதாக கூறியதன் பேரில் அதன் விவரம் சரிபார்க்கப்பட்டு மேற்படி பணத்தை அவரிடம் திருப்பி கொடுக்கப்பட்டது. பின்னர் அங்கிருந்த மற்றொரு நபரை பற்றி விசாரிக்க அவர் தனது பெயர் அய்யாசாமி என்றும் தான் மேற்கு வட்டாரப்போக்குவரத்து அலுவலகத்தில் உதவியாளராக பணிபுரிந்து வருவதாகவும் கூறினார். அவரிடம் இருந்த பணத்தை பற்றி விசாரிக்க அவர் தன்னிடமிருந்த ரூ.30/– ஐ எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தை பற்றி விசாரிக்க தான் காலையில் ரூ.1230/– கொண்டுவந்து அதனை பணியாளர் ரொக்கப்பதிவேட்டில் பதிவு செய்ததாகவும், அதில் ரூ.1200/–ஐ தொழில் வரி செலுத்த கணக்கர் அய்யம்பெருமாளிடம் கொடுத்தாகவும் மீதி பணத்தை தான் வைத்திருந்ததாக கூறியதன் பேரில் அதன் விவரம் சரிபார்க்கப்பட்டு மேற்படி பணத்தை அவரிடம் திருப்பி கொடுக்கப்பட்டது. அதனை தொடர்ந்து அங்கிருந்த கண்காணிப்பாளர் அறையில் இருந்த நபரை விசாரிக்க அவர் தனத பெயர் திரு.லோகநாதன் என்றும் அவர் இவ்வலுவலகத்தில் கண்காணிப்பாளராக பணிபுரிந்து வருவதாகவும் கூறினார். மேலும் அவரிடம் இருந்த பணத்தை பற்றி விசாரிக்க அவர் தன்னிடமிருந்த பணம் ரூ.550/– ஐ (500x1, 20x1, 10x3) எடுத்து ஆஜர் செய்தார். அப்பணம் குறித்து விசாரிக்க அவர் முன்னுக்கு பின் முரணாக பதில் அளித்ததால் அது குறித்து பணியாளர் ரொக்க பதிவேட்டில் பார்வையிட அதில் மேற்படி லோகநாதன் ரூ.70/– மட்டுமே கொண்டுவந்திருந்தாக

குறிப்பிடப்பட்டிருந்தது. மேலும் மேற்படி லோகநாதனின் பதில் ஏற்றுகொள்ளமுடியாததாக இருந்ததால் அவர் வைத்திருந்த பணம் ரூ.550/– ஐ விசாரணைக்ாக கைப்பற்றப்பட்டது. மேலும் மேற்படி லோகநாதனிடம் வேறு பணம் உள்ளதா என்று விசாரிக்க அவர் தனது டேபிளின் டிராயரில் இருந்து கத்தையாக இருந்ததை எடுத்து ஆஜர் செய்தார். அதை ஆய்வுகுழுவினர் எண்ணிபார்க்க அதில் பணம் ரூ.25,000/– (500x50) இருந்தது. இந்த பணத்தை குறித்து அவரிடம் விசாரிக்க அவர் வாகன பதிவு மற்றும் வாகனம் சம்மந்தப்பட்ட பிற வேலைகளுக்காக பொது மக்களிடமிருந்தும், புரோக்கர்களிடமிருந்தும் வசூலிக்கப்பபட்ட தொகை என்று தெரிவித்தால் மேற்படி பணம் கையூட்டு பணம் என கருதி மேற்படி பணம் ரூ.25,000/– ஐ விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் அந்த பணத்துடன் குறிப்புகள் எழுதப்பட்ட இரண்டு வெள்ளை நிற துண்டு சீட்டுகள் காணப்பட்டது. அதின் விவரங்கள் பேனாவால் எழுதப்பட்டிருந்தது. அவற்றில் ஆய்வுகுழுவினர், நேர்முக உதவியாளர் மற்றும் கண்காணிப்பாளர் ஆகியோரால் ஒப்பம் செய்யப்பட்டு விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. அதனை தொடர்ந்து அந்த அறையை அடுத்து வடக்கு பார்த்திருந்த அறையை சோதனை செய்ய அங்கிருந்த நபர் தனது பெயர் அய்யம்பெருமாள் என்றும் தான் இந்த அலுவலகத்தில் கணக்கராக பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். அவரிடம் இருந்த பணத்தை பற்றி கேட்க அவர் தன்னிடமிருந்து ரூ.1,690/– ஐ (500x2, 200x1, 100x4, 50x1, 10x4) எடுத்து ஆஜர் செய்தார். அப்பணம் பற்றி விசாரிக்க இன்று காலையில் இவ்வலுவலக உதவியாளர் அய்யாசாமி என்பவர் அவருடைய தொழில் வரி கட்ட தன்னிடம் கொடுத்த ரூ.1,200/–ம் தனது சொந்த பணம் ரூ.490/– ம் என்று கூறினார். தனது சொந்த பணத்தை அலுவலக பணியாளர் ரொக்கப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ளதாக கூறியதன் பேரில் அதை உறுதி செய்த பின் மேற்படி பணத்தை அவரிடம் திருப்பி கொடுக்கப்பட்டது. அதனை தொடர்ந்து B-பிரிவுக்குள் நுழைந்து அங்கிருந்த நபரை பற்றி விசாரிக்க அவர் தனது பெயர் குணசேகர் என்றும், இவ்வலுவலகத்திற்கு வரும் பொதுமக்கள் மற்றும் புரோக்கர்களிடமிருந்து இவ்வலுவலக வட்டாரப்போக்குவரத்து அலுவலர் மற்றும் கண்காணிப்பாளர் ஆகியோரின் அறிவுரைப்படி பணத்தை வசூல் செய்து அவ்வாறு வசூல் செய்யப்படும் பணத்தை அதன் விவரங்களுடன் இவ்வறையில் உள்ள பீரோவில் வைத்திருப்பதாகவும் தெரிவித்தார். அதன்படி ஆய்வு குழுவினர், கண்காணிப்பாளர், வட்டாரப்போக்குவரத்து அலுவலர் மற்றும் நேர்முக உதவியாளர் ஆகியோர் முன்னிலையில் மேற்படி பீரோவை சோதனை செய்த போது அதன் உள்ளறையில் பணம் மூன்று கத்தையாக ரப்பர்பேண்டால் கற்றப்பட்டு இருந்தது. அவற்றை தனித்தனியாக எண்ணி பார்க்க மொத்தம் ரூ.45,200/– (2000x1,

500x75, 200x14, 100x29) இருந்தது. மேலும் அங்கிருந்த வெள்ளை நிற பாலித்தின் கவரில் ரூ.10/–, 20/–, 50/–, 100/–, 200/– மற்றும் 500/– ரூபாய் நோட்டுக்கள் மடிக்கப்பட்ட நிலையில் கத்தைகத்தையாக காணப்பட்டது. அவற்றை எண்ணி பார்க்க பணம் மொத்தம் ரூ.46,930/- (500x83, 200x22, 100x16, 50x2, 20x5, 10x23) இருந்தது. மேற்படி பீரோவில் வைத்திருந்த மொத்த பணம் ரூ.92,130/– மற்றும் குறிப்புகள் எழுதப்பட்ட 8 துண்டு சீட்டுக்கள் குறித்து குணசேகரிடம் கேட்க, மேற்படி தொகைகள் ஏற்கனவே தெரிவித்தது போல், இவ்வலுவலகத்திற்கு வரும் பொதுமக்கள் மற்றும் புரோக்கர்களிடமிருந்து இவ்வலுவலக வட்டாரப்போக்குவரத்து அலுவலர் மற்றும் கண்காணிப்பாளர் ஆகியோரின் அறிவுரைப்படி பணத்தை வசூல் செய்யப்பட்ட பணம் மற்றும் அதுகுறித்த விவவரங்கள் என்று தெரிவித்தார். இது குறித்து RTO திரு.குமரவேல் மற்றும் கண்காணிப்பாளர் திரு.லோகநாதன் ஆகியோரிடம் விசாரிக்க அவர்கள் இருவரும் அதை ஒப்புகொண்டனர். இதனால் மேற்படி பணம் ரூ.92,130/– ஐ விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் அந்த பணத்துடன் குறிப்புகள் எழுதப்பட்ட 8 வெள்ளை நிற துண்டு சீட்டுகளை ஆய்வுகுழுவினர், நேர்முக உதவியாளர், கண்காணிப்பாளர், வட்டாரப்போக்குவரத்து அலுவலர் மற்றும் திரு.குணசேகரன் ஆகியோரால் ஒப்பம் செய்யப்பட்டு விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேற்படி RTO அறைக்கு முன் அறையில் அமரவைக்கப்பட்டிருந்த சுப்பிரமணியை பற்றி விசாரிக்க அவர் தான் பூவே என்ற ஓட்டுனர் பயிற்ச்சி பள்ளியின் உரிமையாளர் என்றும் தான் இன்று சாகுல் அமீது என்பவரின் கனரக வாகன ஓட்டுனர் உரிமத்தை Re-validation க்காக செய்யப்பட்ட விண்ணப்பத்தை அப்ரூவல் செய்து ஓட்டுனர் உரிமம் பெற்று தருவதற்காக இவ்வலுவலகத்திற்கு வந்து RTO மேற்கு அவர்களை சந்தித்தும் அதற்காக அவர் கேட்ட பணம் ரூ.2,000/– யும் (500x4), Re valid heavy என்று ஒரு துண்டு சீட்டில் எழுதி அதனை ஒரு காக்கி நிற கவரில் வைத்து அவரிடம் கொடுத்தேன். அவர் அதனை பெற்று கொண்டு மேற்படி சாகுல் அமீது என்பவரின் விண்ணப்பத்தை அப்ரூவல் செய்து கொடுத்தார் எனக்கூறினார். இதனை பற்றி RTO விடம் விசாரிக்க மேற்படி விண்ணப்பத்தை அப்ரூவல் செய்து கொடுத்ததையும், அதற்காக பணம் ரூ.2000/– பெற்று கொண்டதையும் ஒப்புகொண்டார். மேற்படி சாகுல் அமீது என்பவரின் கீழ்கண்ட விண்ணப்பத்தை நேர்முக உதவியாளரால் சான்றொப்பம் செய்த நகல் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. இதற்கிடையில் தகவலின் பேரில் சுமார் 18.00 மணிக்கு இவ்வலுவலகத்திற்கு வந்த மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.செந்தில்ராம்

என்பவர் விசாரிக்க அவர் அலுவலக வேலையாக வாகன ஆய்விற்கு சென்றுவிட்டதாகவும் தகவல் கிடைத்ததின் பேரில் தற்போது வந்துள்ளதாகவும் கூறினார். அதனை தொடர்ந்து இயக்க ஊர்தி ஆய்வாளர்கள் என்று குறிப்பிடப்பட்டிருந்த அறையானது சோதனையிடப்பட்டது. சோதனையில் எதுவும் கைப்பற்றப்படவில்லை. மேலும் அவரிடம் சாகுல் அமீது என்பவரின் விண்ணப்பத்தை காண்பித்து விசாரிக்க, அவர் மேற்படி நபர் தன்னிடம் சோதனை ஓட்டம் எதுவும் செய்து காட்டவில்லை என்றும், தனக்கு அந்த விண்ணப்பம் பற்றி விவரம் எதுவும் தெரியவில்லை என்று கூறினார். மேலும் அந்த அலுவலகத்தில் ஸ்மார்ட் கார்டு ரூமில் இருந்த இரண்டு பெண்களை விசாரித்த போது அவர்களில் ஒருவர் சவுந்தரிய என்றும் மற்றொருவர் மணிமேகலை என்றும் இவர்கள் இருவரும் Bonton Software Private Limited என்ற நிறுவனத்தின் மூலம் இவ்வலுவலகத்தில் மாதம் சம்பளம் ரூ.8000/– க்கு பணிபுரிந்து வருவதாகவும் தங்களுடைய வேலை RC, License ஆகியவற்றை Smart Card ல் பிரிண்ட் செய்து கொடுக்கும் வேலை செய்து வருவதாகவும் கூறினார்கள். மேற்படி அந்த அறையை சோதனை செய்ததில், எதுவும் கைப்பற்றப்படவில்லை. மேலும் சோதனையின் போது விசாரணைக்காக அலுவலகத்தில் பராமரிக்கப்பட்டுவரும் அசல் பணியாளர் ரொக்கப்பதிவேடு மற்றும் 2022 பணியாளர்கள் வருகை பதிவேடு ஆகியவைகள் நேர்முக உதவியாளர் அவர்கள் ஆஜர் செய்ய அந்த ஆவணங்கள் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் இவ்வலுவலகத்தில் இருந்த அலுவலர்களை விசாரித்தபோது கடந்த 4 வருடமாக வாகனம் சம்மந்தப்பட்ட அனைத்து பணிகளுக்கும் கட்ட வேண்டிய அரசு கட்டண தொகை மற்றும் ஓட்டுனர் உரிமம் சம்மந்தப்பட்ட பணிகளுக்கு கட்டவேண்டிய அரசு கட்டண தொகையை ரொக்கமாக பெறப்படுவதில்லை என்றும், மேற்படி கட்டண தொகைகள் ஆன் லைன் மூலமே பொது மக்களால் செலுத்தவேண்டும் என்பது தெரியவருகிறது. எனவே இந்த அலுவலகத்தில் ஆஜரில் இருந்த வட்டாரப் போக்குவரத்து அலுவலர் மற்றும் கண்காணிப்பாளர் மற்றும் அலுவலகத்திலிருந்து கைப்பற்றப்பட்ட மொத்த பணம் ரூ.1,55,580/– ஆனது பொதுமக்களிடமும், புரோக்கர்களிடமிருந்தும் வாகன ஓட்டுனர் உரிமம், புதிய வாகனப் பதிவு, தகுதிச்சான்று, அடமான ரத்து மற்றும் பெயர் மாற்றம் போன்றவற்றுக்கு மாமூலாக வசூல் செய்யப்பட்ட கையூட்டு பணம் என்று சோதனையின் போது கைப்பற்றப்பட்ட ஆவணங்களின் மூலம் தெரியவருவதால் மேற்படி பணம் மற்றும் ஆவணங்கள் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் இச்சோதனையின் போது கோவை மேற்கு வட்டாரப்போக்குவரத்து அலுவலர் திரு.குமரவேல், கண்காணிப்பாளர் திரு.லோகநாதன் மற்றும் திரு.குணசேகரன்

ஆகியோர்களை ஆய்வுகுழு ஆய்வாளர் அவர்களால் தனிதனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்யப்பட்டது. இந்த திடீர் சோதனை நடவடிக்கையானது **10.02.2022** அன்று சுமார் **16.00** மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு **11.02.2022** அன்று **06.00** மணிக்கு முடிக்கப்பட்டது. மேற்படி தயாரிக்கப்பட்ட நடவடிக்கைகளை இத்துடன் இணைத்துள்ளேன். அதில் இந்த திடீர் ஆய்வு சம்மந்தமான அனைத்து விவரங்களையும் குறிப்பிட்டுள்ளேன். திடீர் ஆய்வின் போது கைப்பற்றப்பட்ட பணம் ரூ.**1,55,580/–** மற்றும் கைப்பற்றப்பட்ட ஆவணங்களையும் தங்களிடம் ஒப்டைக்கிறேன். மேலும் இது சம்மந்தமாக 1) திரு.K.குமரவேல், த/பெ கந்தசாமி, வட்டாரப்போக்குவரத்து அலுவலர், வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் (மேற்கு), கோவை, **2)** திரு.V.லோகநாதன், த/பெ வேலுச்சாமி, காண்காணிப்பாளர், வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் (மேற்கு), கோவை மற்றும் **3)** திரு.S.குணசேகரன், த/பெ செல்வராஜ், கதவு எண்.**6B**, பொங்கிய கவுண்டர் தெரு, கண்ணம்பாளையம், சூலூர், கோவை ஆகியோர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். (Sdxxxxx) 11/02/2022 **(A.சேனாபதி)** ஆய்வுக்குழு ஆய்வாளர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், கோவை. இணைப்பு: 1) நடவடிக்கை குறிப்பு, **2)** கைப்பற்றப்பட்ட பணம், **3)** பதிவு செய்யப்பட்ட வாக்குமூலங்கள், **4)** கைப்பற்றப்பட்ட ஆவணங்கள். Sir, Received the complaint on 11.02.2022 at 07.45 hrs and registered a case in Coimbatore V&AC Cr.No.04/2022/AC/CB u/s 7(a), 7(b) and 7(a), 7(b) r/w 12 of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018 at 08.00 hrs against Tr.K.Kumaravel, S/o Kandasamy, Regional Transport Officer, RTO Coimbatore (West), 2) Tr.V.Loganathan, S/o Velusamy, Superintendent, O/o RTO Coimbatore (West), Coimbatore and 3) Tr.S.Gunasekaran, S/o Selvaraj, D.No.6B, Pongiya Gounder Street, Kannampalayam, Sulur, Coimbatore. Sdxxxxx 11/02/2022 (C.Latha), Inspector of Police, Vigilance and Anti Corruption, Coimbatore. இதன் அசல் முதல் தகவல் அறிக்கை மற்றும் புகார் மனு அத்துடன் கைப்பற்றப்பட்ட பணம் ஆகியவற்றை கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு சட்ட வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றம், கோயம்புத்தூர் அவர்களுக்கும் மற்ற நகல்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பப்பட்டது.

11/2/2022
(C.லதா)
காவல் ஆய்வாளர்,
ஊ.த.க பிரிவு, கோயம்புத்தூர்.